*அரசாங்க நிவாக சுற்றறிக்கை இலக்கம் : 39/2019*

எனது இலக்கம்: ES/1/වකුලේඛ
*பொது நிர்வாக, உள் நாட்டலுவல்கள்,*
*மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு*
*சுதந்திர சதுக்கம்*
*கொழும்பு-07 .*

*2019.12.31*

*அனைத்து அமைச்சுகளினதும் செயலாளர்கள*
*மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்*
*திணைக்களங்களின் தலைவர்கள்*
*மாவட்ட செயலாளர்கள*
*பிரதேச செயலாளர்கள்*

***<u>இலங்கை பொறியியல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில், 2138/27 ஆம் இலக்க 2019.08.28 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் சேர்க்கப்பட்ட திருத்தங்களை நடைமுறைப்படுத்தல்</u>***

*இலங்கை பொறியியல் சேவையின் மூன்றாம் (III) தரத்திலிருந்து இரண்டாம் (II) தரத்துக்கும் மற்றும் இரண்டாம் (II) தரத்திலிருந்து முதலாம் (I) தரத்துக்கும் தரமுயர்த்துவதற்கான குறைந்தபட்ச சேவைக் காலத்தை திருத்துவது தொடர்பான ஏற்பாடுகளை உள்ளடக்கிய 2138/27 ஆம் இலக்க, 2019 ஆகஸ்ட் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை பொறியியல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஐந்தாவது சேவைப் பிரமாணக் குறிப்புத் திருத்தத்துக்கு அமைய தற்போது சேவையில் உள்ள இலங்கை பொறியியல் சேவை உத்தியோகத்தர்களி தரமுயர்வு பின்வருமாறு வழங்கப்படும்:*

***01. மூன்றாம் (III) தரத்திலிருந்து இரண்டாம் (II) தரத்துக்கு தரமுயர்வு வழங்குதல்***

*1.1) 2019 பெப்ரவரி 26 ஆம் திகதிக்கு முன்னர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்கள் திருத்தப்பட்ட இலங்கை பொறியியல் சேவையின் பிரமாணக் குறிப்பின் 10.1.1.1 இன் தொடர் இலக்கம் (vii) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை பொறியியல் நிறுவனமொன்றில் பூரண அங்கத்துவம் பெற்றிருத்தல் அல்லது இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது பொறியியல் நிறுவனமொன்றில் பூரண அங்கத்துவம் (பட்டய பொறியியலாளர் அந்தஸ்து) பெற்றிருத்தலும் அந்த பட்டய பொறியியலாளர் அந்தஸ்தினை தொடர்ந்தும் பேணி வர வேண்டிய தேவையைத் தவிர 10.1.1.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்த தினம் அல்லது 2019 பெப்ரவரி 26 ஆம் திகதி ஆகிய இரண்டு திகதிகளுக்கும் பின்னர் வருகின்ற தினத்திலிருந்து இரண்டாம் (II) தரத்துக்கு தரமுயர்த்தப்படுவர்.*

*1.2)* *திருத்தப்பட்ட இலங்கை பொறியியல் சேவையின் சேவைப் பிரமணாக் குறிப்பின் 10.1.1.1 இன் தொடர் இலக்கம் (iv) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியை, 01/2014 ஆம் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் அதன் இடைநேர் விளைவான சுற்றறிக்கைகள் மூலம்வழங்கப்பட்ட சலுகைக் காலத்துக்குள் பூர்த்திசெய்த அலுவலர்கள், மற்றைய அரசகரும மொழித் தேவைப்பாட்டை உரிய தேதியில் பூர்த்தி செய்த அலுவலர்களாகக் கருதப்படுவார்கள்.*

*1.3)* *திருத்தப்பட்ட இலங்கை பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.1.1.1 இன் தொடர் இலக்கம் (iv) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சி, அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதனுடன் கூடிய சுற்றறிக்கைகள் வழங்கிய சலுகைக் காலத்துக்குள் நிறைவு செய்யாத அலுவலர்கள், மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சி உள்ளிட்ட இந்தச் சுற்றறிக்கையின் 1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகமைகளையும் பூர்த்தி செய்யும் தினத்திலிருந்து தரம் இரண்டுக்கு (II) தரமுயர்த்தப்படுவர்.*

***<u>02. இரண்டாம் (II) தரத்திலிருந்து முதலாம் (I) தரத்துக்கு தரமுயர்வு வழங்குதல்</u>***

*2.1 )* *சேவைப் பிரமாணக் குறிப்பின் ஐந்தாவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் 2019 பெப்ரவரி 26 ஆம் திகதியில் இரண்டாம் (II) தரத்தில் உள்ள அலுவலர்களை முதலாம் (I) தரத்துக்கு தரமுயர்த்தும் வேளையில், திருத்தப்பட்ட இலங்கை பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.2.1 இன் (I) மற்றும் (III) இன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த தகைமைகளுக்குப் பதிலாக பின்வரும் தகைமைகள் பரிசீலிக்கப்படும்.*

*(அ) இரண்டாம் (II) தரத்தில் இரண்டு (02) வருடங்கள் செயலூக்கமிக்க திருப்திகரமான சேவையைப் பூரணப்படுத்தியிருத்தலும் இரண்டாம் (II) தரத்திற்கு தரமுயர்வு பெற்ற பின்னர் இரண்டு (02) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தலும் வேண்டும்.*

*(ஆ) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறையின் படி இரண்டாம் (II) தரத்திற்கு தரமுயர்வு பெற்ற பின்னர், தற்போதைய தரமுயர்வுத் திகதிக்கு முன்னரான இரண்டு (02) வருடங்கள் திருப்திகரமான அல்லது அதற்கும் மேலான செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல் வேண்டும்.*

*2.2)* *சேவைப் பிரமாணக் குறிப்பின் ஐந்தாவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் 2019 பெப்ரவரி 26 ஆம் திகதியில் மூன்றாம் (III) தரத்தில் ஆறு (06) வருடங்களுக்கு மேற்பட்ட காலம் செயலூக்கமிக்க திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்துள்ள, இச்சுற்றறிக்கையின் 1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய இரண்டாம் (II) தரத்திற்கு தரமுயர்வு பெறும் அலுவலர்களை முதலாம் (I) தரத்துக்கு தரமுயர்த்தும் போது 10.2.1 இன் (I) மற்றும் (III) இன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த தகைமைகளுக்குப் பதிலாக பின்வரும் தகைமகள் பரிசீலிக்கப்படும்.*

*(அ) III மற்றும் II ஆம் தரங்களில் பன்னிரண்டு (12) வருடங்கள் செயலூக்கமிக்க, திருப்திகரமான சேவையைப் பூரணப்படுத்தியிருத்தலும் பதினொறு (11) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.*

*(ஆ) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறையின் படி தரமுயர்வுத் திகதிக்கு முன்னரான பன்னிரண்டு (12) வருடங்கள் திருப்திகரமான அல்லது அதற்கும் மேலான செயலாற்றைகையை வெளிப்படுத்தியிருத்தல் வேண்டும்.*

## <u>குறிப்பு</u>

*2019 பெப்ரவரி 26 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை பொறியியல் சேவையில் III ஆம் தரத்தில் ஆறு (06) வருடங்களுக்கு மேற்பட்ட காலம் செயலுரக்கமிக்க திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள, இந்த சுற்றறிக்கையின் பிரிவு 1.3 இன் ஏற்பாடுகளின் படி இரண்டாம் (II) தரத்திற்கு தரமுயர்வு பெறும் அலுவலர்கள் முதலாம் (I) தரத்துக்கு தரமுயர்வு பெறும் போது, அந்த அதிகாரிகள் மற்றைய அரசகரும மொழித் தேர்திச்சியைப்பூர்த்தி செய்வதற்காக எடுத்த மேலதிக காலப் பகுதிக்குச் சமனான காலப் பகுதியொன்றினால் அந்த அலுவலர்கள் முதலாம் (I) தரத்துக்கு தரமுயர்வு பெறுவது காலதாமதமாக்கப்படும்.*

*2.3)* *2019 பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட, இந்தச் சுற்றறிக்கையின் தொடர் இலக்கம் 01 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி இரண்டாம் (II) தரத்திற்கு தரமுயர்வு பெற்றுள்ள அலுவலர்கள் முதலாம் (I) தரத்துக்கு தரமுயர்வு பெற முன்னர் திருத்தப்பட்ட இலங்கை பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.1.1.1 இன் தொடர் இலக்கம் (vii) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தில் பூரண அங்கத்துவம் பெற்றிருத்தல் அல்லது இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பொறியியல் நிறுவனமொன்றில் பூரண அங்கத்துவம் (பட்டயப் பொறியியலாளர் அந்தஸ்து) பெற்றிருத்தல் மற்றும் அந்த பட்டயப் பொறியியலாளர் அந்தஸ்தினை தொடர்ந்தும் பேணி வர வேண்டும் என்னும் நிபந்தனையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.*

## <u>குறிப்பு</u>

*2019 பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதிக்குப் பின்னர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்களை , மூன்றாம் (III) தரத்திலிருந்து இரண்டாம் (II) தரத்துக்கு தரமுயர்த்தும் போது திருத்தப்பட்ட இலங்கை பொறியியல் சேவைச் பிரமாணக் குறிப்பின் 10.1.1.1 இன் தொடர் இலக்கம் (vii) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தில் பூரண அங்கத்துவம் பெற்றிருத்தல் அல்லது இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பொறியியல் நிறுவனமொன்றில் பூரண அங்கத்துவம் (பட்டய பொறியியலாளர் அந்தஸ்து) பெற்றிருத்தல் மற்றும் அந்தப் பட்டய பொறியியலாளர் அந்தஸ்தினை தொடர்ந்தும் பேணி வர வேண்டிய நிபந்தனையைப் பூர்த்தி செய்யத் தேவையில்லை என்பதுடன் அந்த அலுவலர்கள் இரண்டாம் (II) தரத்திலிருந்து முதலாம் (I) தரத்துக்கு பதவியுயர்வு பெறும் வேளையில் அந்த நிபந்தனையை கட்டாயமாக பூர்த்தி செய்திருக்க வேண்டும்.*

*இந்த சுற்றறிக்கை அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் வெளியிடப்படுகின்றது.*

ஒப்பம்./ எஸ். ஹெட்டிஆரச்சி
செயலாளர்
பொது நிர்வாக, உள் நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு